முருகப்பெருமான் துணை

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 706**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

04.09.2021, சனிக்கிழமை

1. ஞானவேலிகொண்ட அரங்கனே
ஞானிகள் பலம்கொண்ட தேசிகனே
தானதர்மத்தை தன் சக்தியாக்கி
தரணியெங்கும் பரப்பி வருகின்ற குருராஜனே
2. அரசனே அரங்கனே ஆறுமுகனே
அளவில்லாத ஞானபலம் கொண்ட எந்தன் அவதாரனே
தரணியில் உந்தனுக்கு ஞானஅறிவுரை ஆசி
தண்டாயுதன் யானும் பிலவ வேங்கை திங்களில் உரைப்பேன்
3. உரைக்கவே அரங்கன் ஒருவனே கலியின் சிறந்த ஞானி
உயர்வான அரங்கன் சன்மார்க்கமே சிறந்த மார்க்கம்
குறைவில்லாத அரங்கன் தர்மமே உயர் ஞான மார்க்கம்
தட்டாது அரங்கன் வழி வரவரவர
4. வருகவே உலகோர்க்கு வல்லமை கூடுவதோடு
வள்ளல் தன்மையும் பெருகி இனிதே
தருகின்ற சக்தியும் தக்க அதற்கு உகந்த பொருளாதார வளமும்
தண்டாயுதன் என்னருளால் கிட்டி உலகோர் சிறப்பர்
5. சிறப்பான சுத்த சைவ நெறியே
சித்திதரும் உயர்நெறியாக உருவாக்கி
மறுப்பின்றி மக்களிடை விதைத்து
மகாஅறுவடையாக தொண்டு தொட்டு ஆண்டுதோறும் அரங்கன் செய்து வருக
6. வருகின்ற இந்த அற்புதத்தை வணங்கி ஏற்று
வருகின்றேன் உங்களோடு என துணிந்து வரும் மக்களெல்லாம்
ஆறுமுகன் என் அருள் பொருள் தருவதோடு
அளவில்லாத பிறவாமைக்குண்டான பெருஞ்சக்தியும் பெற்று
7. பெற்றுமே உலகோர் பிசகின்றி திளைப்பர்
பெரும்பேறுகண்டு கலியுகத்தில் பிழைப்பர்
ஆறுமுகன் என் வழிபாட்டை செய்து கொண்டு
அரங்கன் வழிவழி தொடரும் மக்களே

8. மாறுதலை அடைந்து மண்ணுலகையே
மாற்றும் மகத்துவம் கூடி
கலிதன்னில் சிறந்த ஞானிகளாக மாறுவர்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–